பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 07 ஞாயிற்றுக்கிழமை (22-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily சுதிர்: 26

# பாதுகாப்பு நிலைமை கிழக்கில் மிக மோசம்!

## கொக்கட்டிச்சோலைப் பகுதியில் மீண்டும் புலிகள் திரள்கின்றனர்

கொழும்பு, டிசம்பர் 22

**கிழக்கில் பாதுகாப்பு நிலைமை மிக மோசமாகியுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

முடிவடைந்த வாரத்தில் கிழக்கில் மூன்று பெரிய தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தியிருக்கின்றார்கள்.

இதற்கிடையில் —

கிழக்கில் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் 'பாடும் மீன்' இராணுவ நடவடிக்கையை முடித்துக் கொண்டு படையினர் முகாம் திரும்பிய கையோடு மீண்டும் அப் பகுதியில் பெரும் எண்ணிக்கையில் விடுதலைப் புலிகள் திரண்டிருப்பதாகவும் —

அப்பிரதேசத்தில் தங்கள் பாதுகாப்பைப் பெரிய அளவில் பலப்படுத்தி வருவதாகவும் —

இது பற்றிய சான்றுகள், தகவல்கள் தங்களுக்குக் கிடைத்திருப்பதாகவும் —

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

விடுதலைப் புலிகளின் பல தளங்களைக் கொண்ட கொக்கட்டிச்சோலைப் பகுதி பல யுத்தகளங்களைச் சந்தித்திருக்கின்றது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதல்கள் தொடரலாம் என எச்சரிக்கை!

கொழும்பு, டிச. 22

களுவாஞ்சிக்குடியில்விசேட அதிரடிப்படையின் பிரதிக் கட்டளை அதிகாரி மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலை அடுத்து —

கிழக்கில் மேலும் பல தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என இராணுவ வட்டாரங்கள் நம்புவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாகக் கிழக்கில் தமது போக்குவரத்துத் தொடர்பாக மிக அவதானமாக இருக்கும்படி படை அதிகாரிகளைப் பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில் —

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளைக் கண்காணிக்க கொழும்பிலிருந்து செல்லும் இராணுவ உயர் அதிகாரிகளைப் படுகொலை செய்வதற்காக இருபது கரும்புலித் தற்கொலைப் படைப்போராளிகள் வடக்கிலிருந்து கிழக்கே சென்றிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று 'தினமின' சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

இத்தகவல் கிடைத்ததை அடுத்து கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகளின் நட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சக்தி வாய்ந்த நிலக்கண்ணிக்கு பருத்தித்துறையில் 3 படையினர் பலி

யாழ்ப்பாணம், டிச. 22

பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்ற சக்தி வாய்ந்த கண்ணிவெடித் தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர். மற்றும் ஒருவர் காயம் அடைந்தார்.

நெல்லியடி மகாவித்தியாலயத்துக்கு ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை வினாத் தாள்களை எடுத்துச் சென்ற படையினரின் வாகனமே நிலக்கண்ணியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயம் அடைந்த சிப்பாய் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது (இ-5-10)

## தமிழரிடம் நகை மற்றும் பணம் பறிக்கும் கொள்ளைக் கோஷ்டி

### வெல்லம்பிட்டியில் கைது

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து கொழும்பு வரும் தமிழ் மக்களிடமிருந்து தங்க ஆபரணங்களையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டு வந்த நான்கு பேர் கொண்ட குழு ஒன்றைக் கொள்ளுப்பிட்டிப் பொலீஸார் வெல்லம்பிட்டியில் வைத்து நேற்றுக் கைது செய்தனர்.

75 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு ஓட்டோ ஆகியவற்றைப் பொலீஸார் கைப்பற்றினர். கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏல் பெரேராவின் பணிப்புரையின் பேரில் பிரதம இன்ஸ்பெக்ரர் சுனில் சாந்தா, சப் இன்ஸ்பெக்டர் ஏச்.டி. பத்திரன ஆகியோர் தலைமையிலான குழு இந்தக் கொள்ளைக் கோஷ்டியைக் கைது செய்தது. (இ-4)

## முச்சந்தி முரளி



அப்ப போயஸ் தோட்ட ... சொல்லுங்கோ!

## நத்தாரை முன்னிட்டு யுத்த நிறுத்தம் சாத்தியம் இல்லை

கொழும்பு, டிச. 22

''எதிர்வரும் நத்தார், புத்தாண்டு தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படும் சாத்யம் எதுவும் இல்லை.

கூட்டுப்படைகளின் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் திஸ்ஸ ஜயதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் ஏற்படுமா என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அதே சமயம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவோ அல்லது ஏனைய சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களோ யுத்த நிறுத்தம் தொடர்பாக எந்த வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## படையினர் மீதான தாக்குதலில் கிரானில் சிப்பாய் ஒருவர் பலி!

மட்டக்களப்பு மாவட்டம் கிரானில் கடந்த வியாழன் மாலை 6.00 மணி அளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் படையினர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார்.

வீதிப் பாதுகாப்பு நடவடிக்கையை முடித்துக் கொண்டு கிரான் பாலத்தடி முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது குமாரர் கோயில் அருகே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

புலிகள் மறைந்திருந்து இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து படையினர் சுமார் 2 மணி நேரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், கிரானில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல்களை ஏவியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## விநாயகர் ஆலயம் ஷெல்லினால் சேதம்

கொழும்பு, டிச. 22

கிரானில் கடந்த வியாழக்கிழமை படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின் போது கிரான் விநாயகர் ஆலயத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது.

ஷெல் விழுந்ததால் வீடு ஒன்றும் எரிந்து நாசமாகியது. மற்றும் இரு வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

இந்த வீடுகளைச் சேர்ந்தவர்களுக்கு தற்காலிக தங்குமிடம் அமைத்து உலர் உணவு வழங்குவதற்கு பிரதேச செயலர் கே. கதிர்காமநாதன் அரச அதிபரிடம் அனுமதி கோரி உள்ளார். (இ)

## வாழைச்சேனையிலும் தாக்குதல்

வாழைச்சேனை பொலீஸ் காவல் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்றுப் பிற்பகல் நடத்திய தாக்குதலை பொலீஸார் முறியடித்துவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினர் புலிகளைக் கண்டுபிடிப்பதற்காக அப்பகுதியில் தேடுதல் நடத்துகின்றனர் என்றும் கூறப்பட்டது. (இ-4)

## பொன்னாலைக் கடற்பகுதியில் மீனவர்கள் இருவர் காயம்

யாழ்ப்பாணம், டிச. 22

கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை நோக்கி, மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

பொன்னாலைக் கடற்பிராந்தியத்தில் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் பொன்னாலையைச் சேர்ந்த பிரகாசம் வேலையா (வயது 31), பண்டத்தரிப்பு சாந்தையைச் சேர்ந்த கனகன் திருச்செல்வம் (வயது 31) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்களுடன் கூட்டாகக் கடற்றொழிலுக்குச் சென்ற சுமார், 50-க்கும் மேற்பட்ட தொழிலாளர் கடலில் மூழ்கி காயமெதுவுமின்றித் தப்பித்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஜனவரி 3 வரை ஜெயலலிதா விளக்கமறியல்

சென்னை, டிச. 22

வண்ணத் தொலைக்காட்சி கொள்வனவு தொடர்பான வழக்கில் சிறையில் இருக்கும் ஜெயலலிதா நேற்று நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது மற்றும் மூன்று வழக்குகள் தொடர்பாக தாம் சரணடைய விருப்பம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பயிற்சி நெறிகள்

தமிழ் - ஆங்கில
O தட்டச்சு O சுருக்கெழுத்து

ஆங்கில வகுப்புக்கள் சகல தரத்தினருக்கும்
Computer, Radio Electronics
வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

விவரங்களுக்கு:
நோர்த் சிலோன் டெக்னிக்கல்
இன்ஸ்ரிரியூட்,
2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (44229)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 06 — 08 — 1912



மறைவு: 03 — 01 — 1996

### திருமதி முத்துமணி முத்துக்குமாரு
(நல்லம்மா)

**திதி: 22 - 12 - 96**

எங்களால் அம்மா என்றும் மாமி என்றும் அம்மம்மா என்றும் அயலவர்களாலும் ஏனையோராலும் அம்மம்மா என்றும் நல்லம்மாக்கா என்றும் அன்புடன் அழைக்கப் பட்டுகலகலப்பாய் வாழ்ந்து, உற்சாகம் தந்த உத்தமியின் முதலாம் ஆண்டுத் திதியாகிய இன்று என்றும் நன்றி கலந்த அன்புடன் நினைவு கூருகின்றோம்.

தனலக்ஷ்மி (மகள்),
சாம்பசிவம் (மருமகன்),
பேரப்பிள்ளைகள்.

5 ஆம் லேன்,
மானிப்பாய் வீதி,
உடுவில்.

(44274)


## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
MARUTHANAMADAM-CHUNNAKAM

## யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

### இலவச விவசாயப் பயிற்சி நெறிகள்

விவசாய சான்றிதழ் பயிற்சி நெறி, குறுகிய கால விவசாய பயிற்சி நெறி ஆகிய இரண்டு பயிற்சி நெறிகளுக்கு விவசாயத்தை சுய தொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. Agriculture Certificate Course**
**விவசாய சான்றிதழ் பயிற்சிநெறி**

ஒரு வருடகால சாதனா போதனா பயிற்சி நெறி க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்த 17 – 25 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இக்கற்கை நெறியில் விவசாய மூலதத்துவம், பயிரியல், மிருக பரிபாலனம், பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமப் பொறியியல் (ஆண்கள்) மனைப் பொருளியல் (பெண்கள்) ஆங்கிலம் ஆகிய பாடங்கள் போதிக்கப்படும்.

**2. Agriculture Junior Certificate Course**
**குறுகிய கால விவசாயப் பயிற்சிநெறி**

4 மாத கால சாதனா போதனா பயிற்சி நெறி விவசாய மூலதத்துவம், பயிரியல்,பூங்கனியியல், மிருக பரிபாலனம் ஆகிய துறைகளில் அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்படும். 17 – 25 வயதிற்குட்பட்ட விவசாயத்தில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு:-

இரண்டு பயிற்சி நெறிகளுக்கும் உதவு தொகை வழங்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைக் கீழ்க் காணும் முகவரிக்கு **02-01-1997** ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும். தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கற்க விரும்பும் பயிற்சி நெறி குறிப்பிடப்பட வேண்டும்.

- அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி
விவசாய நிறுவனம்
மருதனார்மடம், சுன்னாகம்.

(44270)


# பாவனைக்கு உதவாத மருந்து வகைகள்!

## யாழ்ப்பாணத்திலும் விற்பனை

யாழ்ப்பாணம், டிச. 22

இந்தியாவில் உள்ள 'அல்பிறெட்பேர்க்' மருந்து உற்பத்தி நிலையத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றினால் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனையாகும் மருந்து வகைகளில் சில பாவனைக்குதவாதவை என மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாவனைக்குதவாத மருந்துகள் என தேசிய ஆய்வு கூடத்தினால் கண்டறியப்பட்டவை தற்போது விற்பனையில் உள்ளதாகத் தெரிய வருவதாகவும் —

இந்த மருந்து வகைகளில் ''மெற்ற நிடசோல்'' மருந்து யாழ்ப்பாணத்தில் ஒரு பார்மஸியில் கைப்பற்றப்பட்டு உணவு மற்றும் 'மருந்துக் கட்டுப்பாட்டதிகாரி த. மகாதேவாவால் அழிக்கப்பட்டது என்றும் — சுட்டிக்காட்டப்பட்டது.

''அல்பிறெட்பேர்க்'' நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட கீழ்க்கண்ட மருந்துகளையே வாங்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

★ அல்பசின் (அம்பிசிலின் கூட்டுக் குளிசை)
★ மெற்றநிடசோல் 200 மி. கி. குளிசை.
★ குளோறோ பெனிறமின் B. P. 2 மி. கி. -குளிசை
★ பரிசித்தமோல் சிறப்·

(இ-3-10)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசக விழா

யாழ்ப்பாணம், டிச. 22

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையினர் நடத்தும் திருவாசகப் பெருவிழா, ஆச்சிரம மண்டபத்தில் இன்று மு. ப. 9 மணிக்கு ஆரம்பமாகிறது.

விழாவுக்கு வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை தலைமை வகிப்பார்.

திருவாசகத்தின் சிறப்பையும், பயனையும் எடுத்தியம்பும் பொருள்களில் திருவாளர்கள் ஆறு.திருமுருகன், ஆ. சிவநாதன், க. விநாயகமூர்த்தி, சிவ. மகாலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

ஆச்சிரமம் நடத்திய திருவாசகப் பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை உதவி அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் வழங்குவார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

(அ)

## வயோதிபர் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், டிச. 22

அராலியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் காயமடைந்தார்.

அராலியைச் சேர்ந்த என். அருளானந்தம் (வயது81)என்பவரே காயமடைந்தவராவார்.

(இ-15)

## பீற்றர் கெனமன் கடும் சுகவீனம்

கொழும்பு, டிச. 22

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீற்றர் கெனமன் கடும் சுகவீனம் காரணமாக கொழும்பில் உள்ள தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-10)

## தபால் விடுமுறை

கொழும்பு, டிச. 22

பௌர்ணமி தினமான இம்மாதம் 24 ஆம் திகதியும் நத்தார் தினமான 25 ஆம் திகதியும் தபால் விடுமுறைத் தினங்கள் என தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

(இ-10)


## NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA.

## 99 A/L

கணித, உயிரியல் பிரிவு

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

**ஆரம்பம்:- 23-12-1996**
திங்கள் காலை 9-30 மணி.

(44275)


## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்
(வரையறுள்ளது)

### வருடாந்தப் பொதுக்கூட் டம்

காலம்: **1996-12-29** ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் **10. 00** மணி [புதிய நேரம்]

இடம்: வைத்தியசாலை மண்டபம்.

தலைவர்: திரு. சோ. க. வேலாயுதர் (தலைவர்)

பிரதம விருந்தினர்:
கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி ஆணையாளர்
(வலி - மேற்கு)

நிகழ்ச்சி நிரல்

1. இறை வணக்கம்.
2. மறைந்த முன்னாள் பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு மௌன அஞ்சலி.
3. தலைமையுரை.
4. பிரதம விருந்தினர் உரை.
5. சங்கத்தின் 31 - 07 - 96 இலிருந்து செயற்பாட்டுக் கணக்கு விவரங்கள் சமர்ப்பித்தலும் அங்கீகாரம் கோரலும்.
6. புதிய பணிப்பாளர் சபை தெரிவு.
7. ப்ரேரணைகள்.
8. நன்றியுரை.
9. இறை வணக்கம்.

சோ. க. வேலாயுதர்
தலைவர்.

செ. சிவசுப்பிரமணியம்
செயலாளர்.

வைத்தியசாலைச் சங்கம்,
மூளாய். 96-12-16

(44269)

## நினைவஞ்சலி



மலர்வு: 16 — 03 — 1927

மறைவு: 22 — 12 — 1974

அமரர்
### கனகாம்பிகை சபாரத்தினம்

காலமெல்லாம் உங்களது நிழலிலே இறைப்பாற
கனவு நாம் கண்டு நின்றோம்
காலனிடம் உனைத்தோற்று கனவுகள் கானல்
நீராகியே கலங்கி நின்றோம்
காவியமாய் எங்களது உணர்விலே கலையாகி
கருத்துடன் வழி காட்டினாய்
ஓவியமாய்த் தாயே! எம் குல விளக்காய் இலங்கி
எம் வாழ்விலே ஒளியூட்டினாய்!

குடும்பத்தினர்.

'திலக வாசம்',
தபாலக வீதி,
சாவகச்சேரி.

(சி/3783)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்



# பிரச்சினையை நாட்டுக்குள் தீர்க்கும் நம்பிக்கை கையைவிட்டுப் போகிறது!

## அரசு - தமிழ்மக்களிடையிலேயே மத்தியஸ்தம் தேவை

கேள்வி:– நீங்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய பின்னர்தான் வடக்கின் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்தி வைக்கும் முடிவை அரசு எடுத்தது?

டக்ளஸ்:- ஆம், ஏனெனில் ஒருவரும் போட்டியிடப் போவதில்லை; அதனால் தேர்தல் நடத்துவதில் ஒரு பயனும் இல்லை என நான் விளங்கப் படுத்தினேன். ஈ. பி. டி. பியும், புளொட்டும் தேர்தலில் போட்டியிடும் என அவர் நினைத்திருக்கக் கூடும் ஆனால் நாங்கள் மறுத்து விட்டதால் அவர் இப்படி முடிவு எடுத்திருக்கக்கூடும்.

### உடனடியாக தேர்தலைச் சந்திக்க தயார் இல்லை

கேள்வி:– தேர்தல் வைப்பதற்கு சூழ்நிலை உகந்ததல்ல எனக் கருதுகின்றீர்களா? அப்படியாயின் ஏன்?

டக்ளஸ்:- ஆம், நாங்கள் அப்படித்தான் கூறினோம். ஏனெனில் நேரடியாக மற்றும் அரசியல் ரீதியாக உடனடியான தேர்தல் ஒன்றைச் சந்திக்க நாங்கள் தயாராக இல்லை.

நேரடியாக என்றால் அந்தப் பிரதேசத்தில் நாங்கள் சமுகம் தந்து பிரசன்னமாக இருக்கவில்லை. அங்கு இருக்காமல் அங்குள்ள மக்களிடம் தேர்தலில் வாக்களிக்குமாறு நாம் கோருவது நீதியற்றது. அத்தோடு களநிலை என்னவென்பதும் எமக்குத் தெரியாது!

வடக்கு- கிழக்கு நிலைமை குறித்து எமக்குத் தகவல்கள் வந்து கொண்டிருந்தாலும் அங்கு நிலவும் சூழ்நிலை குறித்து சரியான நிலைமை எமக்குத் தெரியாது; உதாரணமாக புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள், மக்களின் சேம நலன் ஆகியவை பற்றி எமக்கு சரியான நிலைமை தெரியாது.

அரசியல் ரீதியாகப் பார்த்தால் மக்களுக்கு முன்வைப்பதற்கு எங்களிடம் எதுவும் இல்லை.

தீர்வுத் திட்டத்தைப் பொறுத்தவரை அமைச்சர் ஜி. எல். பீரிஸுடன் எமக்கு நல்ல புரிந்துணர்வு உள்ளது; வெவ்வேறு கட்சிகளுக்கு இடையே இவ் விடயத்தில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் மனப்பூர்வமாக அவர் ஈடுபட்டிருக்கின்றார் என்பதும் எமக்கு நன்கு தெரியும். அதில் சந்தேகம் ஏதும் இல்லை.

இந்த முயற்சிக்கு இன்னும் சில காலம் தேவைப்படும். ஆனால் அந்தக் காலம் வரை நாம் வெற்றிடத்தில் இருக்க முடியாது. அந்தக் காலம் ஏற்படும் வரை மக்கள் தமது அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள எந்த அமைப்பும் இல்லை. அதனால் தான் மாகாண சபை நடவடிக்கைகளை பலப்படுத்த நாம் விரும்புகிறோம்.

ஆகக் குறைந்தது இடைக்கால நிர்வாகம் ஒன்று இருந்தாலாவது நாம் மக்களிடம் செல்ல முடியும்.

உள்ளூராட்சி அமைப்புகளைப் பொறுத்த வரை நாம் அவற்றை அரசியல் ரீதியான அமைப்புக்களாகக் கருதவில்லை. உள்ளூராட்சித் தேர்தல்கள் அந்தப் பிரதேசத்தில் ஜனநாயக ஆட்சி முறைக்கான ஓர் அடிப்படை என்று எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. அதனால் தான் இந்த நடவடிக்கையை நாம் எதிர்த்தோம்.

### அனுருத்த வடக்கே கூட்டிச் செல்வாரா?

கேள்வி:- தமிழ்க் கட்சிகள் வடக்கே செல்வதைத் தடுப்பது எது?

டக்ளஸ்:- ஏனெனில் அரசாங்கம் அதற்கு எமக்கு வாய்ப்புத் தரவில்லை.

கேள்வி:- ஆனால் ''தெற்கில் வாழ்க்கை நடத்துவதன் மூலம் தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி விட முடியாது. அவை வடக்கே செல்ல வேண்டும்...'' — என்று ஜெனரல் அனுருத்த ரத்வத்தை அண்மையில் கூறியிருப்பதாகக் கூறப்படுகின்றதே?

டக்ளஸ்:- ''உங்கள் விமானங்களில் ஒன்றில் என்னை வடக்கே கூட்டிச் செல்வீர்களா?'' — என்று ஜெனரல் ரத்வத்தையிடம் நான் கேட்ட போது —

''உங்களை நாங்கள் கூட்டிச் செல்ல முடியாது. விடுதலைப் புலிகள் சுட்டால் நாம் அதற்கு பதில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்'' — என அவர் பதிலளித்தார்.

எனக்கு ஏதும் நடந்தால் எனது பாதுகாப்புக் குறித்து மக்களுக்கு தானே பதிலளிக்க வேண்டியிருக்கும் என்பதைத் தான் அவர் அப்படிக் குறிப்பிட்டார்.

அது மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை அல்லது வவுனியாவாக இருந்தால் நாங்களாகவே வீதி வழியாகச் சென்று விடுவோம்.

மிக அண்மையில் வடக்கே போகும்படி அரசு கூறிய போது நாம் அதற்கு மறுத்தோம். ஏனென்றால் அதற்கு முன்னர் சரியான நடவடிக்கைகள் சிலவற்றை பின்பற்றுவதற்கான ஏற்பாடுகளை நாம் செய்ய வேண்டியிருந்தது.

யாழ்ப்பாண மக்கள் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உரிய அமைப்பு ஏதும் இல்லாததால் அங்கு தமிழ்க் கட்சிகளின் பிரசன்னம் அவசியம் என எழுத்து மூலமாகவும், வாய்மூலமாகவும், கோரிக்கைகளையும், சமிக்ஞைகளையும் அனுப்புவதால் இப்போது நாங்கள் அங்கு செல்வது எனத் தீர்மானித்துள்ளோம்.

கேள்வி:- அதிகாரப்பகிர்வு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவாதங்களின் தற்போதைய நிலை என்ன?

டக்ளஸ்:- நான் நாட்டுக்கு வெளியில் இருந்ததால் அண்மைக் கால கலந்துரையாடல்களில் பங்கு பற்றவில்லை.

அமைச்சர் ஜி. எல். பீரிஸ் எனக்கு சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்த தகவலின்படி, சம்பந்தப்பட்ட கட்சிகளிடையே சில முக்கியமான விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட நிலை வரை இணக்கம் ஏற்பட்டிருக்கின்றது. அது ஆரோக்கியமானது.

### ஐ. தே. க வின் நிலை

கேள்வி:- வடக்கு—கிழக்கு இணைப்பு, சமஷ்டி ஆட்சி முறை ஆகியவை தொடர்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க எடுத்துள்ள நிலைப்பாட்டை கவனத்தில்எடுக்கும் போது, தீர்வுத்திட்டம் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணக்கபூர்வமான நிலை வரும் என நீங்கள் கூறுகின்றீர்களா?

டக்ளஸ்:- இலங்கையில்

> தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கொழும்பு ஆங்கில வார இதழான "சண்டேலீடர்" பத்திரிகைக்கு கடந்த வாரம் பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியின் ஒரு பகுதி நேற்றுப் பிரசுரமாகியது. இரண்டாவது இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகிறது.

இத்தகைய விடயங்களில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றை ஒன்று எதிர்ப்பதே வழமை.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து அப்போதைய எதிர்க் கட்சி வீதிக்கு இறங்கி நடத்திய போராட்டங்களுடன் ஒப்பிடும் போது தற்போதைய யோசனைகள் தொடர்பாக ஐ. தே. க அந்த எல்லை வரை செல்லவில்லை.

நாம் இது குறித்து தீர்க்கமான முடிவு எதற்கும் வர முடியாவிட்டாலும் அந்த எல்லை வரை அவர்கள் செல்லாதது ஆரோக்கியமான சமிக்ஞை என்று மட்டுமே கூறமுடியும்.

எது எப்படியென்றாலும் ஐ. தே. கவே நாட்டில் ஓரளவேனும் அதிகாரப் பகிர்வை அறிமுகப்படுத்தி, அதனை ஓரளவேனும் நடைமுறைப் படுத்தியது. அதேசமயம் சமஷ்டி அரசு இணைப்பு ஆகிய விடயங்கள் தொடர்பாக ஐ. தே. க இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை.

'சமஷ்டி' என்ற சொல் வரும் போது ஐ. தே. க. 'பிரிக்க முடியாது' என்ற சொல்லை முன்வைக்கிறது.

அதேவேளை, வடக்கு-கிழக்கில் தற்போதைய நிர்வாகம் 'தற்காலிக இணைப்பு அலகு' என்ற முறையில் தான் நடக்கின்றது. அதை அறிமுகப்படுத்தியதும் ஐ. தே. க. தான். இது கடந்த ஒன்பது ஆண்டு காலமாகச்செயற்பட்டு வருகின்றது. ஆனால் ஐக்கியஇலங்கைக்கு அதனால் ஆபத்து ஏதும் ஏற்பட்டு விடவில்லை; எந்த சமூகத்துக்கும், எந்த இனப்பிரிவுக்கும் அதனால் பாதிப்பும் ஏற்படவில்லை.

கேள்வி:– ஆனால் வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஈ. பி. ஆர். எல். எவ். ஒரு கட்டத்தில் தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தும் எல்லை வரை செல்லவில்லையா? அதனால் அந்தச் சபையைக் கலைக்கும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டதே.!

டக்ளஸ்:– இந்த விடயம் விவாதத்துக்கு உரியது. அது சரியான அணுகுமுறை என நாம் ஏற்கவில்லை. அத்தகைய சந்தேகங்கள் இருக்குமானால் அது இரண்டு பக்கத்திலுமே உள்ளது.

உதாரணமாக, சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முக்கிய பயம் என்ன வென்றால் —

தீவிரப்போக்குடைய தமிழர் ஒருவர் வடக்கு - கிழக்கு அதிகாரத்தைக் கைப்பற்றினால், அவர் இந்தியாவுடன் சேர்ந்து சிங்களவர்களைத் தாக்கக் கூடும் என்பதே.

இந்தப் பயம் நியாயமானதே. அதேசமயம் இருண்ட காலத்தில் சிங்களத் தீவிரவாதப் போக்குடைய ஒருவர் ஆட்சிக்கு வந்து, '' குறைந்த தமிழர்கள் — குறைந்த பிரச்சினைகள் '', '' தமிழர்கள் இல்லையேல் பிரச்சினைகளும் இல்லை '' என்ற நிலைப்பாட்டை எடுத்து தமிழர்களை அழிக்க முயன்றாலும் அதே நிலைதான் ஏற்படும்.

எனவே தமிழர்களுக்கும் அதேவிதமான சந்தேகம் உள்ளது.

ஆகையால் தமிழர்கள் பிரித்துப் பார்க்கப்படாமல், நாட்டின் ஜனநாயக நடைமுறைகளில் மக்களை அதிகளவில் பங்குபற்றச் செய்தால் நாட்டின் சமஷ்டி அமைப்பு முறை மேலும் வலுவடையும்.

1983 கலவரங்கள்தான் ஐக்கியஇலங்கையிலிருந்துதனி நாடு பெறவேண்டும் என்ற இறுக்கமான நிலைக்கு தமிழ் மக்களைத் தள்ளியது.

### 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம்

கேள்வி:- புலிகளுடன் பேச்சு நடத்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தைப் பெறுவதற்கு தனக்குள்ள விருப்பத்தை அரசு வெளிப்படுத்தியுள்ளது. உங்கள் கட்சியின் கருத்து என்ன?

டக்ளஸ்:– வெளி உதவியின்றி இலங்கைக்குள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என நாம் முன்னர் நினைத்தோம், ஆனால் இப்போது அந்த நிலைமை கையைவிட்டுப் போவதாக நாம் உணர்கின்றோம். எனவே மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் அவசியம் என நாம் நம்புகின்றோம்.

ஆனால் அந்த மத்தியஸ்தம் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலானதாக இருக்கக் கூடாது; அது அரசுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் அல்லது விடுதலைப்புலிகள் அல்லாததமிழ்க்கட்சிகளுக்கும் இடையிலானதாக இருக்க வேண்டும்.

### ஆபத்து பொதுவானது

கேள்வி:– இறுதியாக, உங்கள் கட்சி உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் பிரசன்னமாகஇருப்பது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக பார்க் வீதியில் உள்ள உங்கள் அயலவர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளனவே?

டக்ளஸ்:- இது தொடர்பாக இரண்டு பிரச்சினைகள் உள்ளன.

முதலாவது —

நாங்கள் ஏதும் சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடும் என்ற கருதுகோள்.

இரண்டாவது —

தாக்குதல் ஏதும் இடம் பெற்றால் அயலவர்களும் பாதிக்கப்படலாம் என்ற அச்சம்.

முதலாவது விடயத்தைப் பொறுத்தவரை ஈ. பி. டி. பி. எந்தவித சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை. அத்தகைய சம்பவங்கள் ஏதும் இடம்பெற்றால்— அது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டால் — நான் உடனடியாக நடவடிக்கை எடுப்பேன்.

இரண்டாவது விடயத்தைப் பொறுத்த வரை என்னால் ஒன்றும் செய்ப முடியாது. ஏனென்றால் ஜனாதிபதி குமாரதுங்க, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் அத்தகைய ஆபத்திலேயே உள்ளனர். எனவே அயலவர்களும் அதே ஆபத்தை எதிர் நோக்கத்தான் வேண்டும். எனவே இந்த ஆபத்து பொதுவானது தான்; டக்ளஸ் தேவானந்தாவுக்கு மட்டும் உரியதல்ல.

(முற்றும்)

★

## பரீட்சை மேற்பார்வையாளர் மீது வெடி கொளுத்தி வீசிய மாணவர்

. பாணந்துறை, டிச. 22

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு பாணந்துறை றோயல் கல்லூரியில் தோற்றிய மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை காலை வெடிகளைக் கொளுத்தி பிரதம பரீட்சை மேற்பார்வையாளர் மீது வீசினர். இதனை அடுத்து பரீட்சை தாமதமாக ஆரம்பமானது.

இது குறித்து பாணந்துறை பொலீஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக 'தினமின' பத்திரிகை தெரிவிக்கிறது. (இ-10)

## விவசாயிகளுக்கு மீண்டும் வங்கிக் கடன்

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ். மாவட்டத்தில் இலங்கை வங்கிக் கிளைகளில் விவசாயக் கடன் பெற்று மீளச் செலுத்தியவர்களுக்கு மீண்டும் கடன் வழங்க இலங்கை வங்கி தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

ஏற்கனவே விவசாயச் செய்கைக்காக கடன் பெற்று, அக்கடனை மீளச் செலுத்தியவர்களுக்கு மட்டும் இவ்வாண்டுக்கான கடனை வழங்குமாறு தலைமையகம் அனுமதி வழங்கியதையடுத்து, வங்கிக் கிளைகள் ஊடாக கடன் வழங்க பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

ஆகக் கூடிய கடனாக 15 ஆயிரம் ரூபாவை 16 சதவீத வட்டிக்கு பெறமுடியும். இக்கடன் 7 மாதங்களில் மீளளிக்கப்பட வேண்டும்.

இந்தக்கடனைப் பெற 300 பேர் தகுதியுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வன்னியில் 47 நாள்களில் 68 பேர் மரணம்

வவுனியா, டிச. 22

வன்னி மாவட்டத்தில் பரவி வரும் நோய்களினால் கடந்த 47 நாள்களில் 68 பேர் மல்லாவி ஆஸ்பத்திரியில் இறந்துள்ளனர்.

கடந்த மாதம் 38 பேரும், இம் மாதம் 17 ஆம் திகதி வரை 30 பேரும் இறந்தனர்.

வன்னி மாவட்டத்தில் உள்ள மக்களில் 10 சதவீத மாணவர்கள் ஏதோ ஒரு வகைக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம சேவையாளர் பதவிக்கான...
போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

ஆரம்பம்: **23 - 12 - 96** காலை 9 மணி
(திங்கள் முதல் வெள்ளி வரை)

ஆசிரியர்: திரு. குமாரவேல்

**புதிய உயர் கல்லூரி**

ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(44267)


# நாங்கள் வெளியேறி விட்டால் புலிகள் இலகுவில் ஊடுருவி விடுவர்

## அநுராதபுரம் பழைய நகர் மக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, டிச, 22

புனித நகராக்கும் திட்டத்தின் கீழ் அநுராதபுரம் பழைய நகரில் இருந்து வெளியேற மக்கள் மறுத்து வருகின்றனர்.

பழைய நகரில் தாம் வெளியேறுவது விடுதலைப் புலிகளின் ஊடுருவலுக்கு வாய்ப்பாகவே முடியும் என்று அநுராதபுரம் பழைய நகர மக்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பான சங்கமும், விகாராதிபதியும் இக்கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளனர்.

அநுராதபுரம் பழைய நகரை புனித நகராக்க எடுக்கும் திட்டத்தினால் அப்பகுதியில் இருந்து எம்மை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

தலைமுறை தலைமுறையாக நாம் அங்கு வாழ்ந்து வருகின்றோம்.

எம்மை வெளியேற்றுவதன் மூலம் பழையநகர்ப்பகுதி திருடர் குகையாக மாறிவிடும். அத்துடன் விடுதலைப் புலிகள் இலகுவாக நகருக்குள் ஊடுருவவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்.

தற்சமயம் அநுராதபுரம் எல்லை வரை வந்துள்ள விடுதலைப் புலிகள் நகரைக் கைப்பற்ற இது உதவ முடியும்.

நாம் எமது பிரதேசத்தில் இருந்து வெளியேற மாட்டோம் —

இப்படி கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ- 150-3)

## பயிலுநர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க சுற்றறிக்கை

தற்போது ஆசிரியர் சேவையில் உள்ள நிரந்தரமாக்கப் படாத, பட்டதாரி அல்லாத, பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்கும் படியும்—

அவர்களை இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியும் — கல்விச் சேவைகள் ஆணைக்குழு சகல மாகாணக் கல்விச் செயலாளர்களையும் சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளது.

இது தொடர்பான கல்விச் சேவை ஆணைக்குழுவின் 96/3 ஆம் இலக்க சுற்றறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது.

தற்சமயம் பயிலுநர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வரும் தொண்டர் பயிலுநர், ஆரம்பக்கல்வி பயிலுநர், விஞ்ஞான, கணித பயிலுநர் என சுமார் 10 ஆயிரத்து 790 ஆசிரியர்கள் நியமனம் பெற்ற நாளில் இருந்து 4வருடங்கள் பூர்த்தி செய்தநாளில் நிரந்தரமாக்கப்படுவர்.

இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 தரம் இரண்டுக்கான சம்பளம் வழங்கப்படும் — என்று சுற்றறிக்கை கூறுகிறது. (இ-3)

## சுய தொழில் வாய்ப்புக் கடன் ஆரம்ப நாளிலேயே இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், டிச. 22

சுயதொழில் வாய்ப்பைப் பெறுவதற்கு உதவும் 10 ஆயிரம் ரூபா கடன் வழங்கும் திட்டம் ஆரம்ப நாளுடன் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை வங்கி அதிகாரி தெரிவித்தார்.

10 சதவீத வட்டியுடன் 2 வருட காலத்துக்குள் மாதாந்தம் மூலம் மீள செலுத்தும் இக்கடன் திட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இலங்கை வங்கி மாவட்டக் காரியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அன்று 25 பேருக்கு கடன் வழங்கியதுடன் கடன் வழங்கல் இடை நிறுத்தப்பட்டது.

சமுர்த்தி மூகவர்கள் யாழ். மாவட்டத்தில் நியமிக்கப் பட்ட பின்னரே மீளவும் இக்கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று வங்கி அதிகாரி தெரிவித்தார். (இ-3)

## தனித்து இயங்கும் சங்கங்கள்

குருநகர், டிச. 22

குருநகர்ப் பகுதியில் இதுவரை ஒரே அமைப்பின் கீழ் இயங்கிவந்த கடற்றொழிலாளர் சங்கங்கள் அண்மையில் எடுத்த தீர்மானத்தின்படி தற்போது தனித்து இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம், சிறகு வலைத்தொழிலாளர் சங்கம், இழுவை இறால் மடிச் சங்கம், குத்தகையாளர் சங்கம் ஆகிய சங்கங்களே தற்போது தனித்து இயங்கி வருகின்றன. (இ- 4- 51)

## பரிசோதனை

குருநகர், டிச. 22

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் தேநீர்க் கடைகளில் சுகாதாரம் பேணப்படுகின்றதா என்பதைக் கண்டறிய திடீர்ப் பரிசோதனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநகரசபையின் உணவுப் பரிசோதகரும், பொதுச் சுகாதார பரிசோதகரும் இணைந்து இத்திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

நல்லூர், அரியாலைப் பகுதிகள் இத்திடீர்ப் பரிசோதனைகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

(இ-4-51)

## விடைத்தாள் திருத்த அனுமதி

கொழும்பு, டிச. 22

இந்த ஆண்டு ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதற்கு நியமிக்கப்பட்ட சகல ஆசிரியர்களையும் விடைத்தாள்களைத் திருத்த அனுமதிப்பது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்க சுற்றறிக்கைக்கு அமைய சிலர் டிசம்பர் மாதம் ஓய்வுபெற இருக்கின்ற போதும் அவர்களும் விடைத்தாள்களை திருத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## டிசம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி ஓய்வூதியம் பெறுபவர்களின் டிசம்பர் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

உரியவர்கள் எதிர்வரும் திங்கள் முதல் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-100)


**வாழ்த்துகின்றோம்**

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
பரம்பரை அறங்காவலரும், ஆலயப் பொருளாளருமான
**உயர்திரு. குமாரசாமி கணேசதாசன்**
அவர்கள்

அம்பிகையின் திருவருளால் வலி.மேற்கு விவாக (பொது) பதிவாளராகவும், மானிப்பாய் பிறப்பு, இறப்பு பிரிவுப் பதிவாளராகவும் நியமனம் பெற்றிருப்பதையறிந்து மகிழ்ச்சியடைவதுடன் அவரை ஆசீர்வதித்து மனமார வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக்குருக்கள்,
பிரதமகுரு - ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்,
சுதுமலை, மானிப்பாய். (9107)



**LIONS CLUB OF CHUNNAKAM FREE EYE CLINIC**

**லயன்ஸ் கழகம் சுன்னாகம் இலவச கண் சிகிச்சை முகாம்**

சுன்னாகம் லயன்ஸ் கழகம் 1997 ஆம் ஆண்டு தை மாதம் இலவச கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்த உள்ளது. வைத்திய நிபுணர்கள் மூலம் கண் பரிசோதிக்கப்பட்டு சத்திர சிகிச்சை வசதிகள் ஒழுங்கு செய்யப்படும்.

உதவி நாடுவோர் பின்வரும் முகவரிகளில் எழுத்து மூல விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும்.

லயன் எஸ். பீ. சிவஞானம்,
செயலாளர்,
அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

லயன் எஸ். சிவராசா,
தலைவர்,
தேசிய சேமிப்பு வங்கி,
சுன்னாகம்.

(44256)



**12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



எங்களிடம்: 09 — 12 — 1959

இறைவனிடம்: 22 — 12 — 1984

**அமிர்தலிங்கம் செல்வக்குமாரன்**
**(கிச்சி)**

[முன்னாள் ஆங்கில உதவி ஆசிரியர், மன்./நறுவிலிக்குளம் றோ. க. த. பாடசாலை - மன்னார்]

அன்புச் செல்வமே! எமை நீ பிரிந்து
ஆண்டுகள் ஈராறு கடந்தாலும்
என்றுமே எம்முள்ளத்துள் பசுமையாய்
வாழ்கின்றாய்.
நீர் பிரிந்தளித்த பெருந்துயர் என்றுமே
எமக்காறாது.

உமது ஆத்ம சாந்திக்காகத் தினமும் பிரார்த்திக்கும்:

ஐயா, அம்மா, அக்காமார், தங்கை, அண்ணாமார், தம்பிமார், அத்தான்மார், அண்ணி, மருமக்கள், டோட்டி, பியூட்டி, சனா, கிச்சி.

த. அமிர்தலிங்கம்,
(யப்பான் சின்னத்துரை),
வடக்குத் தெரு,
தொண்டமனாறு.

[44248]



**உடன் தேவை**

மருந்தாளர் (PHARMACIST) உத்தரவுப் பத்திரம் உள்ளவரும், 65வயதிற்கு மேற்பட்டவரும், பகுதி நேர ஊழியராகக் கடமையாற்றக் கூடியவருமான ஒரு மருந்தாளர் (ஆண் / பெண்) உடன் தேவை. நேரில் வரவும்.

**சண்முகா பார்மசி,**
இல: 65 (185) பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(9016)



**பிறைற்வே இன்ஸ்ரிரியூட்**

மூத்த விநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை.

**G. A. Q (யாழ். வெளிவாரி)**

இதற்குரிய விரிவுரைகள் நடைபெறுகின்றன.

**A/L 98 புதிய பிரிவு**
ஆரம்பம்: **01 - 01 - 97** (மாலை 2 மணி)

**A/L 96,** மீட்டல், வினாவிடை வகுப்புக்கள்.
ஆரம்பம்: **31 - 12 - 96** (காலை 10 மணி)

**கிராம சேவையாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
ஆரம்பம்: **23 - 12 - 96** (2 மணி)
(திங்கள் முதல் வெள்ளி வரை)

ஆசிரியர்: குமாரவேல்

நிர்வாகி
S. அருள்நங்கை

(44268)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணயக் கைதிகளில் மேலும் சிலர் விடுவிக்கப்பட்டனர்!

லீமா, டிச. 22

பெரு நாட்டின் தலைநகர் லீமாவில் 400 பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் இடதுசாரிக் கிளர்ச்சியாளர்கள் மேலும் சிலரை விடுவித்துள்ளனர்.

30க்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் அவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஜப்பானிய தூதரகத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டதாக சி. என். என். தகவல்கள் தெரிவித்தன.

சிறையில் இருக்கும் தமது சகாக்களை நேற்று மாலை 4.00 மணிக்கு முன்னர் விடுவிக்கவேண்டும் என கிளர்ச்சியாளர்கள் காலக்கெடு விதித்துள்ளனர்.

ஜப்பானிய தூதரகத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் கலந்து கொண்டவர்களே பணயமாகப் பிடிக்கப்பட்டது தெரிந்ததே.

பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு பெரு அரசு அதிகாரிகளுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையிலான சமாதான முயற்சியில் பெருமளவு முன்னேற்றம் ஏற்படவில்லை என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

# யெல்ஸின் மீண்டும் நாளை கடமைக்குத் திரும்புகிறார்

ரஷ்ய அதிபர் யெல்ஸின் நாளை முதல் மீண்டும் தமது அரச கடமைகளைப் பொறுப்பேற்கஉள்ளனர்.

நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் அவர் ஆற்றிய உரையில் தாம் கிரெம்ளின் திரும்பியதும் சுறு சுறுப்பாகச் செயற்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தொழிலாளர்களுக்கு வழங்கப்படாதிருக்கும் சம்பளங்கள், செச்சினிய அமைதி முயற்சி, படைகளில் சீர்திருத்தம் ஆகியவை குறித்து தாம் உடனடியாகக் கவனம் செலுத்தவுள்ளதாக யெல்ஸின் தெரிவித்தார்.

## நேபாளத்தில் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

காட்மண்டு, டிச. 22

நேபாளத்தின் நிலப் பகுதிகளை சிறிது சிறிதாக இந்தியா ஆக்கிரமித்து வருகிறது.

இப்படி நேபாள கொம்யூனிஸ்ட் இயக்கங்கள் கடந்த வெள்ளியன்று நேபாளத்தின் தலைநகர் காட்மண்டுவில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்–

(இ-10)

## நிழல் சட்டசபை

ஹொங்கொங்கில் நிழல் சட்டசபை நிறுவப்படவுள்ளது. 400 உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழு சட்டசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்.

எல்லை நகரமான சென்சனில் அதற்கான கூட்டம் இன்று நடைபெறும். மொத்தம் 60 ஆண்களும் பெண்களும் சட்ட சபையில் இடம் பெறுவர்.

இதற்கிடையே அடுத்த ஆண்டு ஹொங்கொங் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்து பணியாற்றும்படி அரசாங்க ஊழியர்களை புதிய நிர்வாகி துன்ஷி குவா கேட்டுக்கொண்டுள்ளார்.

(இ-10)

## சுயாட்சியை ஏற்க வாய்ப்பு

இஸ்ரேல் சில நிபந்தனைகளுடன் பலஸ்தீன சுயாட்சியை ஏற்றுக்கொள்ள வாய்ப்புஇருப்பதாகஇஸ்ரேல் பிரதமர் நத்தானியாகுவின் தலைமைப் பேச்சாளர் தெரிவித்தார்.

பலஸ்தீன தன்னாட்சி அமைப்புக்கு எத்தகைய அதிகாரம் வழங்கப்படும் என்பதை அறிந்துகொள்ள இஸ்ரேல் அதிக அக்கறையுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஜெயலலிதாவுக்கு வீட்டுக்காவலா? எங்களுக்கும் சலுகை வேண்டும்

## தடா கைதிகள் மனுத் தாக்கல்

ஜெயலலிதாவின் போயர்ஸ் தோட்ட வீட்டை சிறைச்சாலையாக அறிவித்துஅவரை அங்கு வீட்டுக்காவலில் வைத்தால் தமக்கும் அதே போன்ற சலுகை வேண்டும் என தடா கைதிகள் உயர் நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

தம்மை வீட்டுக்காவலில் வைக்குமாறு நீதிமன்றத்தில் ஜெயலலிதா மனுத்தாக்கல் செய்திருப்பது தெரிந்ததே.

(இ-10)

# தண்ணீரைச் சுத்தம் செய்ய சூரிய ஒளியை பயன்படுத்தலாம்!

டப்ளின், டிச. 22

தண்ணீரைச் சுத்தம் செய்ய சூரிய ஒளியைப் பயன்படுத்தி வெற்றி காண முடியும் என அயர்லாந்து மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

நோய்களை உருவாக்கும் கிருமிகளைக் கொன்று தண்ணீரைச் சுத்தப்படுத்த சூரிய ஒளியைப் பயன்படுத்தலாம் என சோதனைகள் மூலம் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பிளாஸ்டிக் போத்தல்களில் தண்ணீரை அடைத்து ஆறு மணித்தியாலம் வெயிலில் வைத்து அதன் பின்னர் அத் தண்ணீரைக் குடித்த மாணவர்களுக்கு வயிற்றுப்போக்கு நோய் வரும் ஆபத்து மிகவும் குறைவாகஇருந்ததாகத்தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

# பாப்பரசரை அரபாத் சந்தித்து பேசினார்

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் பாப்பரசரை ரோமாபுரியில் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

கிறிஸ்துநாதர் பிறந்த 2000ஆவது ஆண்டு விழாவை அவர் பிறந்த இடமான பெத்லஹேமில் இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் இணைந்து எப்படிச் சிறப்பிக்கலாம் என்பது குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

[இ-10]

# பெனாஸிர் ஆதரவாளர்கள் பலர் பாகிஸ்தானில் கைதாகும் நிலை

இஸ்லாமாபாத், டிச. 22

பாகிஸ்தானில் பதவியிழந்த பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் ஆதரவாளர்கள் பலர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உலக அரங்கில்

பெனாஸிர் பூட்டோவின் சகோதரர் முர்தாஸா பூட்டோவின் படுகொலை தொடர்பாக சதிசெய்த குற்றச்சாட்டின் பேரில்இவர்கள் கைது செய்யப்படவுள்ளனர்.

பெனாஸிர் பூட்டோவின் கணவர் சர்தாரி ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் சென்ற வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்ட போதிலும் மீண்டும் கைதாகி உள்ளார்.

பொலீஸ் நிலையமொன்றில் சர்தாரியை பெனாஸிர் பூட்டோ சந்தித்து 2 மணி நேரம் பேசினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

# ஜெயலலிதாவை கட்டிப்பிடித்து அழுதார் லட்சுமி சிவபார்வதி!

சென்னை, டிச.22

சென்னை மத்திய சிறையில் உள்ள தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை சந்தித்த தெலுங்கு தேசம் (என். டி. ஆர்) கட்சித் தலைவி லட்சுமி சிவபார்வதி ஜெயலலிதாவைக் கட்டிப் பிடித்து அழுதார்.

அவரைத் தட்டிக் கொடுத்து ஜெயலலிதா ஆறுதல் கூறினார்.

லட்சுமி பார்வதி கதைக்கும் போது பல முறை அழுத போதும், ஜெயலலிதா மனம் கலங்காமல் மன உறுதியுடன் இருந்ததாக அவருடன் சென்ற சட்டசபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

(இ-3)

புலிகளுக்கு ஆட்டிலறி கிடைத்திருப்பதால்

# முகாம் விஸ்தீரணத்தை படையினர் அதிகரிக்க வேண்டிய நிலையில்!

கொழும்பு, டிச. 22

வடக்கு — கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு ஆட்டிலறிகள் கிடைத்துள்ளதால் பாதுகாப்புப் படையினர் தமது முகாம்களின் விஸ்தீரணத்தை அதிகரிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இப்படி கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

அம்பாறை மாவட்டத்தில் புளுக்குனாவ முகாம் தாக்குதல் வெற்றியளித்துள்ளதால் கிழக்கில் மேலும் முகாம்களைத் தாக்க புலிகளுக்கு உற்சாகம் ஏற்பட்டுள்ளது என்றும்— அச்செய்தி மேலும் தெரிவித்தது.

கிழக்கில் குறிப்பிட்ட அளவு படைகளை வைத்துக் கொண்டு வடக்கில் பெரும் அளவில் தாக்குதல் நடத்துவது என்பது கேள்விக் குறியாகும்.

கிழக்கில் படை முகாம்களை புலிகளின் தாக்குதலில் இருந்து காக்க வேண்டுமானால் படைநகர்வுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

புலிகள் நீண்ட தூர ஆயுதங்களைக் கொண்டிருப்பதாலும் — அவர்களின் தாக்குதல் திறன் அதிகரித்துள்ளதாலும் — படைநகர்வுகளுக்கு கூடுதல் படைகள் தேவைப்படுகின்றன.

அத்துடன் படைநகர்வுகளையும் ஒரு குறிப்பிட்ட எல்லை வரை தான் மேற்கொள்ள முடியும்.

குறிப்பிட்ட எல்லைக்கு விடுதலைப் புலிகளை விரட்டி திரும்ப வேண்டிய நிலையே இருந்து வருகிறது.

கூடுதல் படையினர் நிலை கொண்டால் மட்டக்களப்பின் ஏனைய பகுதிகளிலும், எல்லைகளிலும், வேறு இடங்களிலும் தாக்குதல்கள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுவிடும்.

இப்படி அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-150)

## மலேரியா - டெங்கு பரவும் அபாயம்

நுளம்பினால் பரவும் மூளை மலேரியா, டெங்குக் காய்ச்சல் மற்றும் சாதாரண மலேரியா போன்ற நோய்கள் குடாநாட்டில் நிலைகொள்ளும் ஆபத்து தோன்றியுள்ளது.

கடந்த காலங்களில் குடாநாட்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் மலசலகூடகுழிகள் உடைந்து சேதமடைந்து வெடிப்புக்கள் ஏற்பட்டது பரவலாக ஏற்பட்டுள்ள குண்டுகுழிகள், மக்கள் இடம்பெயர்ந்து குடிமக்கள் அற்ற குடியிருப்புக்கள் அதிகரித்து, வெற்றுக்காணிகள் பராமரிப்பற்ற பற்றைகள் புல்பூண்டு செடிகள் ஆகியவை காரணமாக குடாநாட்டில் நுளம்பின் பெருக்கம் எக்காலத்திலும் இல்லாதவாறு பெருகியுள்ளது.

மேலும் போதிய மலத்தியோன் வராததாலும் மலேரியா தடுப்புப்பிரிவினரின் மந்த கதியிலான செயற்பாட்டினாலும் இந்த நோய்கள் [illegible] பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-15)

# நாதசுர - தவில் கலைஞர்களுக்கு விசேட அடையாளஅட்டை தேவை

## இசை வேளாளர் சங்கம் தீர்மானம்

தெல்லிப்பழை, டிச. 22

''நாதசுர — தவில் கலைஞர்கள் தமது இசைக்கருவிகளுடன் போக்குவரத்துச் செய்யும் போது சோதனை நிலைங்களில் முன்னுரிமை அடிப்படையில் போக்குவரத்துச் செய்ய அவர்கள் அனுமதிக்கப்படவேண்டும். சோதனை நிலையங்களில் இக்கலைஞர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். அரச அதிபரையும் சம்பந்தப்பட்ட தரப்பினரையும் கோரும் தீர்மானமொன்று இலங்கை இசை வேளாளர் சங்க கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இணுவில் கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் சங்கத் தலைவர் என். கே. பத்மநாதன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:–

★ கடந்த கால வன்செயல்களால் பாதிக்கப்பட்டுள்ள இசை வேளாளர் சமூகத்தினருக்கு புனரமைப்பு, புனர்நிர்மாணம், கலாசார உதவிகள் என்ற வகையில் அரசினால் வழங்கப்படும் நிதியுதவிகள், மற்றும் பொருளுதவிகள் கிடைக்க ஆவன செய்யவேண்டும்.

★ நாதசுர — தவில் கலைஞர்களுக்குத் தேவையான இசை உபகரணங்களை தமிழகத்திலிருந்து வரவழைத்துத் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ இசைவேளாளர் சங்கத்துக்கென அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு காணி ஒன்றைச் சுவீகரிக்கவும், கட்டடம் ஒன்றை அமைக்கவும் நிதியுதவி பெற்றுத் தர வேண்டும்.

★ நாதசுர — தவில் பயிற்சிப்பாடசாலை ஒன்றை அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

★ வயது முதிர்ந்த கலைஞர்களுக்கு மாதாந்த அலவன்ஸ் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

மற்றும் பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

(இ-68)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வெற்றுப் பொருள் விற்பனை, வெற்றுச் சாக்கு, உரப்பை போன்றன சகல கிளைகளிலும் விற்பனைக்குண்டு. யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம், இல. 291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/3773)

வீட்டுத் தளபாடங்கள், அலுமாரி, கட்டில், மேசைகள், பெண்கள் நடுத்தர புதிய சைக்கிள், ஓகன் விற்பனைக்குண்டு. இல. 3, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். (44252)

பஷன் பழக்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். கிளிமாமா, சந்தை ஒழுங்கை, நவாலி தெற்கு. (9095)

இறைச்சிக் கோழி சுத்தம் செய்து விற்கப்படும். V.K.M. Farm, இல. 12, கனக சபை லேன், குமாரசாமி ஸ்டோர்ஸ், சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (9098)

### சேவை

தட்டச்சு வேலைகள், ஆய்வுக் கட்டுரைகள், உறுதிகள் போன்றவை சிறந்த முறையில், குறைந்த செலவில் செய்து தரப்படும். வே. பூபாலசிங்கம், B 418, சோலை அம்மன் வீதி, மீசாலை. (44225)

### கணிதம், ஆங்கிலம் '97

முதலாம் தவணைப் பரீட்சையில் தவறாது உயர்ந்த பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து ஆண்டு 6 தொடக்கம் O/L வரை கற்பிக்கப்படும். முன்னாள் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர். இல. 85, சிவன் கோயிலடி, (சிவன்கோயில் மேற்கு வீதி) திருநெல்வேலி. (44199)

### கடை வாடகைக்கு

சிறிய கடை (முன்பு வியாபாரம் நடந்தது) ஆஸ்பத்திரி வீதி — கோயில் வீதிக்கு சமீபமாக வாடகைக்கு உண்டு. தொடர்பு:- இல.3, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். (44253)

### திருமணசேவை

சகல தொழில், உத்தியோக மணமக்களின் பெற்றோர் தாமதமின்றி ''சேவை நம்பகம்'' விவாக சேவையில் இணைந்து விரைவான திருமணங்களுக்கு ஏற்பாடு செய்யலாம். யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம் (ஸ்ரீதர் தியேட்டர் சமீபம்). (44259)

### மணமகள் தேவை

25 வயதுடைய புனர்பூச நட்சத்திரம் (லண்டன் — எஞ்சினியர்), உத்தரட்டாதி நட்சத்திரம் 7 இல் செவ்வாய் 24 வயதுடைய (லண்டன் — எஞ்சினியர்). லண்டனில் உள்ள பெண்கள் விரும்பத்தக்கது. ஆண்கள் இருவரின் சாதகங்கள் எம்மிடம் உள்ளன. க. சர்மா, ஸ்ரீ முருகன் சோதிட நிலையம், நல்லூர். 9 மணி தொடக்கம் 4 மணி வரை. (44251)

### தவறிவிட்டது

செல்லத்தம்பி வரதராசா இல. 711661581V எனும் அடையாள அட்டை கொடிகாமம் சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொடிகாமம் அருள் நாயகி புத்தகசாலையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/3778)

### தேவை

நல்ல நிலையிலுள்ள டீப் பிறிசர் தேவை. ஹொட்டல் றொலக்ஸ், இல. 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (44235)

### மணமக்கள் தேவை

வயது 35 செவ்வாயுள்ள அண்ணருக்கும் (லண்டன்), பட்டதாரி ஆசிரியைக்கும் வயது 32 மாற்றாகவோ தனியாகவோ மணமக்கள் தேவை. பெண் வெளிநாடும் செல்வார். நேரில் மு. செல்லப்பா, புன்னாலைக் கட்டுவன் தெற்கு. (44207)

### ஓகன் வகுப்பு

ஓகன், புல்லாங்குழல், கிற்றார் வகுப்புகள் வார நாள்களில் மாலை 2 மணியிலிருந்து நடைபெறுகின்றன. முகவரி:- 238, கோயில் வீதி, நல்லூர். (ஆலயத்தில் இருந்து 300 யார் தெற்கே). (44237)

### சலவைப் பவுடர்

ஆசிரிய / மாணவ மணிகளே! உங்கள் சீருடைகள் வெண்மையாகப் பளிச்சிட நுரைவளம் கூடிய மில்க்வைற் சலவைப் பவுடரைப் பாவியுங்கள். 450 கி. பவுடர் 50/-, 10 பெட்டிகள் 450/- பத்து வெற்றுப் பெட்டிகளுக்கு ஒரு உள்ளூர் கைலேஞ்சி பரிசாக வழங்கப்படும். உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாருங்கள் - மில்க்வைற். (சி/3732)

## தேவை

★ R. M. P

★ டிஸ்பென்சர்

(Dispenser)

நேரில் வரவும்

**Dr. எஸ். சிவானந்தராஜா**

**வைத்திய நிலையம்,**

**மானிப்பாய்.**

(44250)

## BOOK KEEPING & AUDITING

தகுதி வாய்ந்தவர்களினால் மாதாந்த /வருடாந்த வரவு செலவு, ஐந்தொகைக் கணக்குகள், தயாரித்தலும் பரிசோதித்தலும் செய்து கொடுக்கப்படும். விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL ASSOCIATION**

**Accounting, Auditors & Advisers**

2 nd Cross Street,

Jaffna. (44230)

---

வலி. கிழக்கு பிரதேச சபை

# 1997 ஆம் ஆண்டுக்கான மீளக் கேள்வி அறிவித்தல்

## சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகை கேள்விப்படிவம்

கேள்விப்படிவம் வழங்கல் (உரிய உப அலுவலகத்தில்) — **27 - 12 - 1996** ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை.

கேள்விப்படிவம் ஏற்றல் — **30 - 12 - 1996** ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை.

கேள்விப்படிவம் திறத்தல் — **31 - 12 - 1996** ஆம் திகதி — முற்பகல் 10.00 மணி வரை.

கேள்விப்படிவம் திறக்கும் இடம் — கோப்பாய் உப அலுவலகம்.

| குத்தகை விவரம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக் குறைந்த கேள்வி |
|---|---|---|---|
| 1. உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 100/- | 250/- | 82,000/- |
| 2. ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 75,000/- |
| 3. உரும்பிராய் மத்திய சந்தை | 100/- | 150/- | 45,000/- |
| 4. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 100/- | 1,500/- |
| 5. ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 50/- | 100/- | 1,000/- |
| 6. நீர்வேலி வடக்கு மீன் சந்தை | 50/- | 100/- | 3,000/- |
| 7. வாதரவத்தை மாட்டிறைச்சிக்கடை | 100/- | 150/- | 5,000/- |

**கதிரவேலு கேதீஸ்வரன்,**
**விசேட ஆணையாளர்**

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
20. 12. 1996. (சி/3775)

---

யாழ். மாவட்ட

# சமூக அபிவிருத்தி மன்றம் வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

நாளை (23-12-96) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மன்றக் காரியாலயத்தில் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். அன்று காலை 8.30 மணிக்கு பணிப்பாளர் சபைக் கூட்டமும் நடைபெறும்.

### நிகழ்ச்சி நிரல்

1. இறை வணக்கம்
2. தலைவர் உரை.
3. சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்.
4. கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தல் 1988-1994 டிசம்பர் வரை.
5. முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல்.
6. வரவு செலவுத் திட்டம்.
7. பிரேரணைகள் சமர்ப்பித்தல்.
8. இணைப்பதிகாரி உரை:
   **திருமதி ருக்மணி ஆனந்தவேல்.**
9. மதிய உணவு
10. புதிய நிர்வாகம் தெரிவு
11. நன்றி உரை.

**திருமதி திருஞானசோதி குணேந்திரன்.**
257/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
நிர்வாக செயலாளர், சமூக அபிவிருத்தி மன்றம்.
(44261)

---

# யாழ். மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள் குத்தகை - 1997

உதயன் பத்திரிகையில் 22 - 11 - 96 ஆம் திகதி, பிரசுரிக்கப்பட்ட மேற்படி விடயமான விளம்பரத்திற்கு கவனம் கோரப்படுகின்றது. பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு மீளக் கேள்வி கோரப்படுகிறது.

கேள்விப்பத்திரம் விநியோகித்தல் — 30 - 12 - 96 பி. ப 3.00 மணி வரை

கேள்விகள் ஏற்றல் — 31 - 12 - 96 நண்பகல் 12.00 மணி வரை

பாஷையூர்ச் சந்தை
அரியாலைச் சந்தை
கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை இல. 1
கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை இல. 2
குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல. 6
குருநகர் ஆட்டிறைச்சிக் கடை இல. 7

**வே. பொ. பாலசிங்கம்,**
**மாநகர ஆணையாளர்,**
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 20 - 12 - 96
(சி/ 3777)

---

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உற்பவம்: 08 — 10 — 1960



நற்பவம்: 25 — 12 — 1985

## செல்வி தங்கபூபதி முத்துவேல்

**திதி:- 22 - 12 - 1996**

'' அன்பின் பிறப்பிடமே! பாசத்தின் உறைவிடமே! ஆண்டுகள் பதினொன்று சென்றாலென்ன யுகம் பல சென்றாலும் மறக்க முடியுமா உமது நினைவலைகளை. ''

உமது பிரிவால் வாடும்:
**அப்பா, அம்மா, தம்பி, மைத்துனி, மாமா, மாமி, உற்றார், உறவினர், நண்பர்கள்.**

'பதி பவனம்'
சந்நிதி வீதி,
உடுப்பிட்டி.
(44258)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தமிழர் கல்விக்கு பேராபத்து!

பத்தாயிரம் தமிழ் ஆசிரியர்கள் தமது பதவிகளில் இருந்து ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளனர் என்ற செய்தி அதிர்ச்சி தருவதாகும். இவ்வளவு பெருந்தொகையில் தமிழ் ஆசிரியர்கள் ஒரே தடவையில் இதற்கு முன்னர் ஓய்வு பெற்றிருக்கவில்லை.

வழமையாக, தமது ஓய்வு பெறும் காலம் வந்ததும் சேவையிலிருந்து நீங்கிக் கொள்ளும் தமிழ் ஆசிரியர்களின் இடங்களுக்கே புதியவர்கள் நியமிக்கப்படுவதில்லை. அதனால் தமிழ் மொழி மூலம் போதிக்கும் ஆசிரியர்களின் பற்றாக்குறை வருடாந்தம் உயர்ந்து கொண்டு செல்வதுண்டு.

இது விடயத்தில் கல்விப் பகுதி பெரிதாக அக்கறை காட்டுவதில்லை. கஞ்சிக்குள் பயறு போட்டது போல இருந்தாற் போல ஒரு முறை, பல வருட இடைவெளியில், தமிழ் மொழி மூல ஆசிரியர் பதவிகளுக்கு ஆள் சேர்க்கப் படுவதுண்டு!

இதனால் வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளிலும் மலையகம் மற்றும் தென்னிலங்கைப் பகுதிகளில் உள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்கனவே மிக மோசமடைந்திருக்கிறது.

தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் ஒரே தடவையில் பத்தாயிரம் பேர் இளைப்பாறுவது என்பது தமிழர் மற்றும் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியைச் சுட்டெரிப்பதாகவே அமையப் போகிறது.

அரசாங்க ஊழியர்கள் சுய விருப்பின் பேரில் ஓய்வுபெறுவது சம்பந்தமாக, அரசு கொண்டு வந்த புதிய கட்டுப்பாடுகள் ஏனைய துறைகளை விட, தமிழ் மாணவர்களின் கல்வியைத் தான் மிகப் பெரிய அளவில் பாழடிக்கப் போகிறது; சீரழிக்கப் போகிறது.

பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பதற்கு ஒப்ப, போரினால் மிகவும் பின்தள்ளப்பட்டுள்ள வடக்குத் தமிழ் மாணவரின் கல்வி நிலை, கல்வி முன்னேற்றம் மேலும் அதள பாதாளத்தை நோக்கி, கீழே உதைத்துத் தள்ளப்படுகின்றது.

ஓய்வு பெறுவதற்கான புதிய நிபந்தனைகள், கட்டுப்பாடுகளுக்குள் அகப்படாமல் தப்பிக் கொள்ளும் நோக்குடன் ஓய்வு பெற விண்ணப்பித்துள்ள தமிழ் ஆசிரியர்களில் மிகப் பெரும் எண்ணிக்கையானோர், ஆகக் குறைந்தது பத்து வருடக்கற்பித்தல் அனுபவமுடையவர்களாக இருப்பர்.

அவர்களின் இடங்களுக்கு —அவர்களுக்குப் பதிலாக— உடனடியாக ஆகக்கூடியது இரண்டாயிரம் ஆசிரியர்களையாவது அரசு நியமிக்குமா என்பது சந்தேகத்துக்கு உரியதே!

அவ்வாறு நியமிப்பினும் கூட கற்பித்தல் அனுபவம் இல்லாத இளம் ஆசிரியர்கள் மூலம் — தொழிலுக்குப் புதியவர்கள் மூலம் — தமிழ் மாணவர் கல்வி நிலையை இப்போதுள்ள மட்டத்திலேனும் தக்கவைக்க முடியுமா?

பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல, வருங்காலத் தமிழ்ப் பிரசைகளின் — இன்றைய தமிழ் மாணவர்களின் — கல்வி மிகப் பெரிய அளவில் நாசமாக்கப்படும் பேராபத்துத் தோன்றியுள்ளது.

# இலக்கு வைக்கப்பட்ட அதிகாரி தப்ப அவரிலும் மூத்த அதிகாரி சிக்கினார்

## களுவாஞ்சிக்குடி தாக்குதல் குறித்து மேலும் தகவல்கள்

கொழும்பு டிச. 22

களுவாஞ்சிக்குடியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் விசேட அதிரடிப் படையின் இயக்குநர் பொலீஸ் அத்தியட்சகர் றோஹான் சிறிவர்த்தனாவுக்கே இலக்கு வைக்கப்பட்டது. ஆனால் அவரிலும் மூத்த அதிகாரியான விசேட அதிரடிப் படையின் பிரதிக் கட்டளை அதிகாரியும் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருமான உபாலி சஹபந்து அந்தத் தாக்குதலில் சிக்கினார்.

பாதுகாப்புவட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகைகள் இச் செய்தியை வெளியிட்டன.

இத்தாக்குதலை நடத்தியவர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மேஜர் தங்கராஜா ஸ்ரீதரன் அல்லது ஸ்ரீபதி(அம்பாறை) என்று ஒரு செய்தியும் —

அம்பாறையைச் சேர்ந்த செந்தேவன் என்று மற்றொரு செய்தியும் தெரிவித்தன.

தற்கொலைத் தாக்குதல் நடத்திய நபர் அதற்குச் சில மணி நேரத்துக்கு முன்னர் கொக்கட்டிச்சோலையில் இருந்திருக்கின்றார்.

அவருக்கு கிழக்குப் பகுதி படை அதிகாரிகளை நன்கு தெரிந்திருக்கின்றது.

கிழக்கில் — குறிப்பாக கல்முனையில் நடைபெற்ற பல சம்பவங்களுக்கு இவர் சூத்திரதாரியாக இருந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

விசேட அதிரடிப்படை அதிகாரிகளின் பிரயாணங்களைக் கடந்த பல தினங்களாக அவர் அவதானித்து வந்துள்ளதாகவும் இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தும் பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

பொலீஸ் அத்தியட்சகர் றோஹான் சிறிவர்த்தனாவுக்கு இலக்கு வைத்து அவர் காத்திருந்தபோதிலும், அவரிலும் மூத்த அதிகாரியான சஹபந்துவைக் கண்டதும் அந்த அதிகாரி மீது தமது இலக்கை அவர் திருப்பியிருக்கின்றார். என்று கூறப்படுகின்றது, (உ-150)

## கோப்பாய் பகுதி வாகன உரிமையாளருக்கு

கொழும்புத்துறை, டிச. 22

வலி. கிழக்கு, கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த வாகன உரிமையாளர்கள் எரிபொருள் பெறுவது தொடர்பாகத் தங்களது வாகனங்களை தங்கள் கிராம அலுவலர் பிரிவுகளில் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-30)

## தேசி, தோடை விநியோகம்

வலி தென்மேற்கு, டிச.22

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் தேசி, தோடைக் கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. (இ-145)

### பல்கலைக்கழகங்களின்

## கல்வி சாராத ஊழியர்கள் தொழிற்சங்கம் போர்க்கொடி

கொழும்பு, டிச. 22

பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் கல்வி சாராத ஊழியர்களின் ஓய்வூதியப் பிரச்சினை குறித்துப் பேச அடுத்தமாதம் 3ஆம் திகதிக்கு முன் ஜனாதிபதி நேரம் ஒதுக்காது விட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக பல்கலைக்கழகங்களின் கல்வி சாராத ஊழியர்களின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இந்த ஊழியர்களின் ஓய்வூதியம் தொடர்பாக 94ஆம் ஆண்டு ஆராய்ந்த கமிட்டியின் சிபார்சின் அடிப்படையில் 3-1-96 இல் அமைச்சரவை அதை ஏற்றுக்கொண்டது. திறைசேரியும் இதற்கான நிதியை ஒதுக்கியது.

எனினும், இன்று வரை ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்று அந்த தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (இ-3-150)

## மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் எங்கே?

### பொலீஸார் தேடுகின்றனர்

கொழும்பு, டிச. 22

விசேட அதிரடிப் படையின் பிரதிக் கட்டளை அதிகாரியும் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருமான உபாலி சஹபந்துவைக் கொலைசெய்வதற்கு விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் நபர் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் தலைமறைவாகியிருக்கின்றார்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தும் பொலீஸார் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றனர்.

மேற்படி தாக்குதல் நடந்த இடத்துக்குப் பக்கத்தில் மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையம் ஒன்றை அவர் நடத்தி வந்தார் என்றும் —

அந்த நிலையத்தில்வைத்து அவரது சைக்கிளில் தற்கொலைக் குண்டு தாரியின் குண்டுகள் மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டன என்று கருதப்படுவதாகவும்—

தாக்குதலின் பின்னர் மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையம் பூட்டப்பட்டு விட்டது என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்தின் உரிமையாளர் தலைமறைவானதை அடுத்து அவரது தாயையும், சகோதரியையும் அதிகாரிகள் விசாரணைக்கு அழைத்துச் சென்றிருப்பதாக தெரியவந்தது. (உ-150)

# அருளும் மெய்மாட்சியும் வெளிப்பட இறைவனுக்கு கீழ்ப்படிய வேண்டும்

ஊனுடல் எடுத்த, தன்னையே வெறுமையாக்கிய இறைவனை இயேசுவில் காண்கிறோம். பிலிப்பியர் 2:7 இல் ''வெறுமையாகிய அவதாரம்'' எனக் காட்டப்படுகின்றார். மனுவுருக் கொண்ட இறைவன் தன்னை அழிக்கப்படும், தோற்கடிக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களுடன் அடையாளப்படுத்துகிறார். அடக்குவோரிடமிருந்து பக்தரை மீட்பதே இந்த அவதாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

மனுவுரு ஏற்பின் போது, படைக்கும் கடவுள், தம் படைப்பின் ஒரு பகுதியாக தாமே மாறுகின்றார். அனைத்து வல்லமை மிகு இறைவன், தனது சொந்த நல வாழ்வினுக்காக தெய்வீக வல்லமைகளை வலிந்து பற்றியபடி இராமல், மனிதனாகின்றார். சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து, மாட்டுத் தொழுவத்தில் படுத்திருந்தமையே அவரது தாழ்மைக்கு அப்பட்டமான அடையாளமாகின்றது.

இவ்வெறுமையாக்கல் மூலம் இயேசு தன்னிலுள்ள தெய்வீகப் பண்புகளைக் களைந்து எறிந்து விட்டார் என்பதல்ல, மாறாக, பணியாளாகவும், தன்னையே மற்றவர்களுக்குக் கொடுப்பவராகவும் வருகிறார். இத்தகு அர்ப்பணிப்பினால் இறைமாட்சி மிகு வாழ்வை மானிடத்திற்குக் கொணர்ந்தார். இயேசு, நிறைவாழ்வினை வழங்குகின்றார் என்பதை விட, அவ்வாழ்வினைப் பெறுவதற்காக தன்னையே வழங்குவதே இங்கு முதலிடம் பெறுகிறது.

மனிதனுக்குள் அவனது வீழ்ச்சியின் வடுக்கள் இருந்தாலும், இறைச் சாயலில் படைக்கப்பட்டதால், முன்னேறுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. வீழ்ச்சியின் போது, மனிதனின் சுயாதீனமும், படைப்பாற்றலும் பறிக்கப்படவில்லை. மீண்டும் கடவுளின் பிள்ளைகளாகுவதற்கான சுயாதீனமும் ஆளுமையும் அவனிடம் உண்டு.

அடுத்தவர்களுக்காக இச் சுயாதீனத்தையும், ஆளுமையையும் வெறுமையாக்குவதிலேயே, மனிதனிடம் அருளும், மெய்மாட்சியும் வெளிப்படுகின்றன. இதுவே இறைவனுக்குக் கீழ்ப்படிவதாகும்.

### ஞாயிறு நற்பிரசாதம்

இத்தகு பண்பு, மனித சமூகத்தினுள் தோன்ற வேண்டும் என்பதற்கான முன் நிகழ்வே, 'இயேசுவின் மனுவுருவெடுத்தல்' ஆகும்.

இன்றைய அரசியல், பொருளாதார அடிப்படையிலான வல்லமைகளைக் கூட தன்னுடையதாக்காமல், மனித வாழ்விற்கான வசதிகளைத் தேடுவதை விட்டு, அடிமைப் பண்பை தெரிவு செய்கிறார் இயேசு; எப்பொழுதும் தன் மேலாதிக்கத்தை மற்றவர் மீது நிலைநாட்ட முயலும் மனிதனுக்கு இந்தப் பண்பை தன்னுடையதாக்கிக் கொள்ளுதல் கடினமாயுள்ளது; குறுக்கு வழியே தாரகமந்திரமாயுள்ளது.

தன்னைப் பணிந்துகொண்டால், உலகையே தருவதாக அலகை கூறுகிறது. இயேசுவோ, அலகையின் கால்களைப் பிடிப்பதை விடுத்து, தம் சீடரின் பாதங்களைக் கழுவுகிறார். அடக்குபவர்களோடு அல்ல, அடக்கப்படுபவர்களோடுதான் தன்னை ஒன்றிணைக்கிறார் இயேசு. அன்னை மரியாவும், ''வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்; தாழ் நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்'' என இறைவனைப் புகழ்ந்து பாடுகிறாள்.

இது அடிமைத் தனத்தை ஏற்றுக் கொள்ளல் என்பதல்ல, மற்றவர்களுக்காகத் தன்னையே கொடுக்கும் வாழ்வு. சுரண்டும், திசை திருப்பும் சமூக அமைப்புக்களை மாற்றுவதற்கான முயற்சியில் தம்மையே விலையாகக் கொடுக்கிறார் இயேசு.

பவுல் அடியார், 'இறைவன் செல்வராயிருந்தும், உங்களுக்காக ஏழையானார்' (2 கொரி 8 : 9) என்கிறார். உணர்வுகளால் மட்டும் மற்றவர்களுக்காகப் பரிவு காட்டுவதோடு மட்டுமல்லாது, நமக்கு உரிமையான பொருள்களாலும் மற்றவர்களை ஆதரிப்பதையுமே வெறுமையாதலும் ஏழ்மையாதலும் கூறுகின்றன.

இவ்வாழ்வு முறைக்கே இயேசு மனித சமூகத்தை அழைக்கிறார். இவ்வாறே இயேசுவின் மானிட வெறுமையாகலில் நாம் பங்குபெறலாம். இதுவே மனித வாழ்விலும், உறவுகளிலும், சமூக அமைப்புக்களிலும் ஒட்டுமொத்தமான மாற்றத்தை ஏற்படுத்தும்.

— சகோ.எம்.ஜூட் சுதர்சன்

### நாளை

மார்கழி 8

திங்கட்கிழமை

திதி: சதுர்த்தசி

பின் இரவு 1. 32 வரை.

நட்சத்திரம்: ரோகிணி

முன் இரவு 7.56 வரை.

ராகுகாலம்: 7.56-9.26

[illegible]

([illegible]

பழைய நேரப்படி)

## சீனி விலை 32 ரூபாவாக நிர்ணயம்

கொழும்பு, டிச. 22

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ஒரு கிலோகிறாம் சீனியின் விலையை திங்கட்கிழமை தொடக்கம் 32 ரூபாவாகக் குறைக்கும்.

அதே சமயம் நத்தாரை முன்னிட்டு கூட்டுறவுக் கடைகளுக்கும் மொத்த விற்பனையாளர்களுக்கும் அனுமதிப் பத்திரம் பெற்ற முகவர்களுக்கும் கூடியளவு பாவனைப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் அறிவித்துள்ளது (இ- 4)

## அங்கத்தவரை புதிதாகத் திரட்ட நடவடிக்கை

தென்மராட்சி, டிச. 22

சாவகச்சேரி நகரசபையின் பொது நூல் நிலையத்திலும் மீசாலை, நுணாவில் கிளை நூல் நிலையங்களிலும் புத்தகங்கள் இரவல் பெறுவதற்கான பழைய அங்கத்துவம் ரத்துச் செய்யப்பட்டு புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.

புதிய அங்கத்தவர்கள் சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை முதல் அந்தந்த நூல் நிலையங்களில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### தமிழ் பிரமுகர் கொலை!

## படையிலிருந்து தப்பி ஓடியவர் நீதிமன்றில் சரண் அடைந்தார்

கொழும்பு, டிச. 22

தமிழ் யூனியன் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் பிரபல கிரிக்கெட் துறை நிர்வாகியும் தொழிலதிபருமான சாந்திகுமார் கொலை தொடர்பாக இராணுவத்திலிருந்து தப்பியோடிய லெப்டினன்ட் தினேஷ்டி சில்வா (வயது 26) என்பவர் கடந்த வியாழனன்று கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் பியசேன ரணசிங்க முன்னிலையில் சரணடைந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக இராணுவத்திலிருந்து தப்பியோடிய மற்றும் மூன்று சிப்பாய்கள், ஒரு சிங்களப் பெண், வெலிக்கடைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம இன்ஸ்பெக்டர் பாலிக சிறிவர்த்தனா ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே—

(உ-150)

## கிழக்கில் 'குதிரை ஓட்டம்'

கொழும்பு, டிச. 22

நேற்று நடைபெற்று முடிந்த ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சையில் கிழக்கில் ''குதிரை''கள் நல்லாகச் சவாரி செய்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இன, மத வேறுபாடின்றி சிங்கள தமிழ், முஸ்லிம் ''குதிரை''கள் தாராளமாக ஓடியதாகவும்—

பரீட்சை மேற்பார்வையாளர்கள் அதனைப்பெரிதாகக் கருதவில்லை என்றும் — அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-150)

## 2ஆவது பட்டியல் வங்கி கிளைகளுக்கு

வலி. தென்மேற்கு, டிச, 22

சங்கானை பிரதேச செயலகத்தால் மீளக்குடியமர்வு நிவாரணப் பணத்துக்குரிய இரண்டாவது பட்டியல் வங்கிக் கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுசங்கத்தின் கிராமிய வங்கிக்கு மட்டும் 420 பேருக்குரிய பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-145)

### ஜனவரி 3...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்து மனு ஒன்றைக் கையளித்தார்.

இதனை ஏற்ற நீதிபதி அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை அவரைக் காவலில் வைக்க உத்தரவிட்டார்.

நிலக்கரி இறக்குமதி, மீனா விளம்பர நிறுவனத்துக்குச் சலுகை, கொடைக் கானல் ஹோட்டல் முறைகேடுகள் சம்பந்தப்பட்டதே அந்த மூன்று வழக்குகளும் ஆகும்.

(இ-10)

### பாதுகாப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதியில் விடுதலைப் புலிகளின் பல்வேறு தொலைத் தொடர்புக் கருவிகள் பெரும் எண்ணிக்கையில் இயங்குவது பற்றிய சமிக்ஞைகள் கிடைத்திருப்பதால் புலிகளின் பல்வேறு நிர்வாக நிலையங்கள், பிரிவுகள், தளங்கள் அங்கு மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதை ஊகிக்க முடிகின்றது என மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏழு நாள்களாக தாங்கள் மேற்கொண்ட 'பாடும் மீன்' இராணுவ நடவடிக்கையை முடித்துக் கொண்டு படையினர் முகாம் திரும்பிய கையோடு புலிகள் மீண்டும் அங்கு திரண்டிருப்பது அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக படை அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்தது.

'பாடும் மீன்' நடவடிக்கை மூலம் கைப்பற்றிய பிரதேசங்களைக் கைவிட்டுப் பின்வாங்கியது ஏன்? என்று படை அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது —

'தொடர்ந்து அங்கு தங்குவதில் பலன் இல்லை. கொக்கட்டிச்சோலைப் பகுதியில் மட்டும் தனித்துத்தகங் முடியாது. அப் பிரதேசத்தை அரசு கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாயின் முழுப் பகுதியிலும் அரசுத் துருப்புக்கள் தங்கியிருக்க வேண்டும். அது பயனற்றது' — என்று அவர் பதிலளித்தார். (உ-150)

### தற்கொலைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டம் தொடர்பாக [illegible] கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்தது. (உ-10-150)

### விடைத்தாள் திருத்தும் பணி

## கல்முனை, மட்டக்களப்புப் பகுதி ஆசிரியர் மீண்டும் போர்க்கொடி!

கொழும்பு, டிச. 22

ஏற்கனவே தமக்கு உறுதி அளிக்கப்பட்டபடி ஆபத்து அலவன்ஸ்வழங்கப்படாவிடில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணி குறித்து மறுபரிசீலனை செய்ய நேரிடும் என்று மட்டக்களப்பு, கல்முனை கல்வி மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் அச்சுறுத்தி உள்ளனர்.

எதிர் வரும் 30 ஆம் திகதி வரை இதற்கான காலக்கெடுவை இவர்கள் விதித்துள்ளனர்.

18 மாத ஆபத்து அலவன்ஸ் வழங்கப்படாததால் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியை பகிஷ்கரிக்கப் போவதாக இவர்கள் ஏற்கனவே அறிவுறுத்தி இருந்தது தெரிந்ததே.

எனினும் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் தமிழ் ஆசிரியர் சங்கம் ஆகியவை அளித்த உறுதி மொழியை அடுத்து இவர்கள் பகிஷ்கரிப்பு பயமுறுத்தலைக் கைவிட்டிருந்தனர்.

எனினும் கல்முனை கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த 198 ஆசிரியர்களுக்கும் மட்டக்களப்பு கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த 314 ஆசிரியர்களுக்கும் டிசம்பர் மாதச் சம்பளம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டபோது ஆபத்து அலவன்ஸ் சம்பளத்துடன் வழங்கப்படவில்லை.

இதனை அடுத்தே அவர்கள் 30 ஆம் திகதிவரை காலக்கெடு விதித்துள்ளனர்.

இதே சமயம் கல்முனை மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கு இந்த ஆபத்து அலவன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. (இ)

## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 22

வவுனியா இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரி சிரேஷ்ட மாணவர்களுக்கான பட்டதாரிக் கற்கை நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் விரிவுரைகளை நடத்துகின்றனர். (இ-15)

## அமோனியா உரம் விநியோகம்

சுன்னாகம் பாதுகாப்பு அரணுக்குள்ளே வாழும் விவசாயிகளுக்குத் தேவையான அமோனியா உரத்தை வழங்குவதற்கு உடுவில் கமநல சேவை நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவின் சுன்னாகம் உப அலுவலகத்தில் வைத்து கிராம சேவை உத்தியோகத்தர்களின் சிபார்சுக் கடிதத்துக்கு தினமும் 200 விவசாயிகளுக்கு உரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

# மரண அறிவித்தல்கள்

## முத்துச்சாமி மகாலிங்கம்

(உரிமையாளர்:- வின்சிலோஸ் கராஜ், 149, மின்சாரநிலைய வீதி, யாழ்.)

53, பெரியதம்பிரான் வீதி, வண்-மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட முத்துச்சாமி மகாலிங்கம் 21 - 12 - 1996 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் முத்துச்சாமி - செல்லாச்சி தம்பதியினரின் மகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், சர்மிளா (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), சுராஜ் (யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்), மயூரன் (யா/ இந்துக்கல்லூரி), சகிலா (யா/ கொக்குவில் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திரு. திருமதி சி. விசுவலிங்கம் தம்பதியினரின் மருமகனும், திருமதி இராசாத்தியம்மா, காலஞ்சென்ற சண்முகநாதன், திருமதி சுபத்திரை, காலஞ்சென்ற திருமதி மகாலட்சுமி, திருமதி இராசம்மா, திருமதி திரேசம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும், சண்முகராஜா, தவரெட்ணராஜா, தருமராஜா, மகேந்திரன், திருமதி தவமணிதேவி, திருமதி மனோகரிதேவி, திருமதி பரமேஸ்வரி ஆகியோரின் அன்புமைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
ம. இந்திராணி
(மனைவி)

(9109)

## மாணிக்கம் - இரத்தினவடிவேல்

(திருச்சிற்றம்பலம் அன்சன்ஸ் உரிமையாளர்)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மாணிக்கம் இரத்தினவடிவேல் 13-12-96 இல் காலமானார்.

அன்னார் மாணிக்கம் இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும் திருச்சிற்றம்பலம் அரியநாயகத்தின் மருமகனும் வள்ளியம்மாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சக்திவேல், சத்தியவாணி, தங்கவேல் (லண்டன்), மாணிக்கவாசகர் (ஜேர்மனி), வபிஸ்டா தேவி, சிவனருட்சோதி (கிறீஸ்), இரத்தின ஜோதி, கலாவாணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பிறேமகுமாரி, செந்திவேல் (தபால் தந்திப் பொறியியலாளர்), பவானி (லண்டன்), ஜெயந்தி (ஜேர்மனி), மதிவண்ணன் (சுவிஸ்), யோகசாந்தி ஆகியோரின் மாமனாரும், ஜெயரூபன், உதயபானு, பிரதீபன், ரமேஸ், ஜெயந்தி, சுதாகர், நிவேதிகா (லண்டன்), ஐஸ்வர்யா (ஜேர்மனி), ஜெயராம், ராகவன், பிரியங்கா, பிரதீபா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-12-96 இல் ஊறணி மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
இ. இரத்தினஜோதி
(மகன்)

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(44277)

## சுப்பிரமணியம் செல்வராசா

பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வராசா 21 - 12 - 96 இல் காலமானார்.

அன்னார் தங்கரெத்தினத்தின் அன்புக் கணவரும், திருமதி மகாலெட்சுமி—சிவபாதம் (ஆசிரியை, முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), கணேசலிங்கம் (ஜேர்மனி), குகதாசலிங்கம், சிறிநாகேஸ்வரன் (ஆசிரியர் யா / இந்து ஆரம்ப பாடசாலை), கதிர்காமலிங்கம் (ஊழியர் யாழ். இந்து மகளிர் கல்லூரி), திருமதி புவனேஸ்வரி — சிவராசா (ஆசிரியை, கல்வியன்காடு இந்து தமிழ் அரசினர் வித்தியாலயம்), சிவகுமார், அரிதரகுமார், கருணாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவபாதம் (ஆசிரியர், வாரிவளவு காரைநகர்), நீலாம்பிகை, சந்திரா, தர்மராணி ஆகியோரின் மாமனாரும், சாரதா, சிவகௌரி, புவனதாஸ், லஜீந்தன், சிவானுஜா, கஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 22 - 12 - 96 பகல் 12 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
க. சிவபாதம்
(மருமகன்)

பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

(44272)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நே. ஜெயவதி விக்டோறியா

செபஸ்தியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான திருமதி நே. ஜெயவதி விக்டோரியா 20-12-96 ஆம் திகதியன்று கொழும்பில் காலமானார்.

இவர் நேசம் விக்டோறியாவின் (றவிதா ஸ்ரோர்ஸ், யாழ்.) அன்பு மனைவியும், றமியா, றஞ்சித் (ஜேர்மனி), றவிதா, யூட்டினா, வேர்ஜினியா, கமில்ரன், அஜேந்தினி, றொஷானி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அதிபனின் மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று ஞாயிறு 22 - 12 - 96 இல. 236, பிகறிங்ஸ் றோட், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 என்னும் முகவரியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொழும்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி R. பீரிஸ்.
(மைத்துனி)

J. நேசம்,
றவிதா ஸ்ரோர்ஸ்,
யாழ்ப்பாணம்.

(44265)

## திருமதி சின்னத்துரை கனகம்மா

(மண்டைதீவு)

மண்டைதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை கனகம்மா 19-12-96 அன்று கரியாலை நாகபடுவானில் காலமானார்.

அன்னார் காசிநாதர் - சின்னத்துரையின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, சச்சிதானந்தம், சுந்தரமூர்த்தி (ஜேர்மனி), சரவணபவன் (ப. நோ. கூ. ச. வேலணை), நாகேஸ்வரி (ஜேர்மனி), செல்வராசா (சுவிஸ்), மகேஸ்வரி (ஜேர்மனி), புவனேஸ்வரி (ஜேர்மனி) சாருகாசினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற திருநீலகண்டன் மற்றும் தவானந்தராஜா, நவநீதரம்பை (வேலணை பிரதேச சபை), காலஞ்சென்ற வசந்தா மற்றும் இந்திராணி, ஆனந்தராசா (ஜேர்மனி), தாமரைச்செல்வி (சுவிஸ்), தனபாலசிங்கம் (சுவிஸ்), மோகன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கரியாலை நாகபடுவானில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி ந. சச்சிதானந்தம்
(மருமகள்)

74, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(44273)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org